036

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - மட்டம் 3
இறுதிப் பரீட்சை 2007
சட்டமுறைமை - LWU 1412
காலம்: 03 மணித்தியாலம்

திகதி: 13.03.2007 நேரம்: மு.ப 10.00 – பி.ப 1.00 மணி வரை

பகுதி 'அ' மற்றும் 'ஆ' ஆகியவற்றிலிருந்து ஆகக்குறைந்தது இரண்டு வினாக்களை தெரிவு செய்து எல்லமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

## பகுதி அ – உரோமன் சட்டம்.

1. முழு உரிமையுடைய உரோம பிரஜை ஒருவனான டைட்டுஸ், புருட்டஸ் என்பவனை தனது ஒரே மகன் கொரனேலியஸ் உடைய tutor ஆக இறுதி விருப்பாவணம் ஒன்றின் மூலம் நியமித்தான். கொரனேலியாசுக்கு 6 வயதாக உள்ளபோது டைட்டேஸ் இறந்தான். அத்துடன் புருட்டஸ் ஆதனங்களின் நிர்வாகத்தை பொறுப்பேற்றான், அதன் பின்பு புருட்டஸ் கொரனேலியாஸ்க்கு உரித்தான பெறுமதி வாய்ந்த ஆதனங்களில் பல பகுதிகளை அதனுடைய உண்மையான பெறுமதியில் நான்கில் ஒரு பங்கு பெறுமதிக்கு வாங்கினான். கொரனேலியாசுக்கு 18 வயதாக உள்ளபோது இன்னொரு பெறுமதியான ஆதனத்தின் ஒரு பகுதியை குறைந்த விலையில் விற்குமாறு கொரனேலியாஸை புருட்டஸ் வேண்டினான். அவனும் அவ்வாறே செய்தான்.

   கொரனேலியஸ் 19 வயதில் கிளியோபற்றாவுடன் சேர்ந்து வாழ ஆரம்பித்தான். எனினும் 9 மாதங்களின் பின்பு அவனை அவள் விட்டுச்சென்றாள். சில வருடங்களுக்கு பின்பு கொரனேலிஸ் ஔரலியா என்ற(உரோமபிரஜை) பெண்ணை சந்தித்ததுடன் அவர்கள் அடுத்துவரும் 15 வருடங்கள் ஒன்றாக சேரந்து வாழ்ந்தனர். அக்காலப்பகுதியின் போது அவர்களுக்கு இரண்டு மகன்மார்களும் ஒரு மகளும் இருந்தனர்.

   (i) காணி விற்பனை தொடர்பாக அவற்றினுடைய உண்மையான பெறுமதியை விட குறைவாக விற்றமைக்காக கொரேனேலியஸ் ஏதேனும் பரிகாரங்களை கோர முடியுமா? உமது விடையை விளக்குக.

   (8 புள்ளி)

   (ii) கீழே குறிப்பிடப்பட்டுள்ள திறந்தவர்களிடையிலான சட்ட உறவு முறையின் இயல்பு என்ன?
   (உமது விடைக்குரிய காரணங்களை விளக்குக)

   (அ) கொரனேலியஸ் மற்றும் கிளியோபற்றா

   (ஆ) கொரனேலியஸ் மற்றும் ஔரலியா

   (5 புள்ளிகள்)

   (iii) தமது பிள்ளைகள் மீது கொரனேலியஸ் மற்றும் ஔரலியாவுக்குள்ள அதிகாரங்கள் யாவை?

   (7 புள்ளிகள்)

2. பிரபல்யான ஓவிய வரைஞரான பிளேவியஸ் தன்னுடைய அதிகூடிய பெறுமதிவாய்ந்த மற்றும் மெச்சத்தகு ஓவியங்கள் சிலவற்றின் கண்காட்சி ஒன்றை வைக்க தீர்மானிக்கிரான். அவன் உரோமில் உள்ள பெரிய மண்டபம் ஒன்றை வாடகைக்கு பெற்றதுடன், சட்டசபை உறுப்பினர்கள் மற்றும் செல்வந்த பிரபுக்கள் உட்பட பல முக்கியமான ஆட்களை தனது கண்காட்சி திறப்பு வைபவத்துக்காக அழைத்தான்.

திறப்பு விழா நிகழ்வு நடைபெற்ற வேளையில் அழைக்கப்படாத குளோடியஸ் மற்றும் கெஸிஸஸ் ஆகியோர் தமது அடிமைகளுடன் மண்டபத்துக்குள் நடந்துவந்தனர். அவர்கள், ஓவியங்கள் பிளேவியஸ் உடையதல்ல அவன் தான் உண்யைான ஓவியக் கலைஞன் என நடிக்கின்றான் என சத்தமிட தொடங்கினான்.

“தீயவனும், அதிக இரும்பு இதயம் படைத்த ஒரு மனிதனால் எவ்வாறு அழகான காட்சிகளை வடிவமைக்க முடியும்? அவனுடைய மனைவி உரோமிலேயே மிகவும் அவலட்சனமானவள் அவளை பார்த்தாலேயே உங்களுக்கு அவனுடைய அழகு பற்றிய கருத்தை விளங்கிக்கொள்ளலாம். அவள் பன்றிகளுக்கு உணவூட்டும் போது முகத்தை மறைத்துக்கொண்டே போவாள் அல்லது அவை உணவை உண்ண மறுக்கும்!” என குளோடியஸ் கூறுகிறான்.

கஸியஸ் தன்னுடைய உடைவாளை எடுத்து தாக்கத் தொடங்கியதுடன் ஓவியங்களையும் அழித்தான். நம்பிக்கைக்குரிய வேலையாளும் அண்மையில் ஹிரோடொட்டுஸ் உடைய ஆதனங்களுக்கு முழுமையான மரபு உரிமையாளனாக நியமிக்கப்பட்ட சேவியஸ் என்பவன் ஓவியங்களுக்கு முன்னாள் நின்று கொண்டு இருந்தான். அவன் ஓவியங்கள் அழிக்கப்படுவதை தடுக்க முயற்சி செய்தான். கஸியஸ் அவனை உடைவாளால் தாக்கியதுடன் சேவியஸ் பாரதூரமான காயங்களுக்கு உட்பட்டு பின்பு இறந்தான். பிளேவியஸ் உடைய இன்னுமொரு அடிமையான டெறியஸ் என்பவன் காயமடைந்ததுடன் தனது ஒரு கண் பார்வையை இழந்தான்.

மேலே நடைபெற்ற சம்பவங்களின் பொருட்டு பிளேவியஸிற்கு இருக்கக்கூடிய சட்ட பரிகாரங்களை ஆராய்க.

3. பின்வரும் கூற்றுக்களில் ஏதேனும் இரண்டினது சரியான தன்மையினை ஆராய்க.

(i) முற்றிலும் இலவசமான ஒப்பந்தங்களில் அதனை பெற்றுக்கொண்டவர் மூலப்பொருளை(Original Item) அல்லது அதற்கு சமமான ஒன்றை மீள ஒப்படைக்க கட்டுப்பட்டுள்ளார் என்பதை உரோமன் சட்டம் அங்கீகரித்துள்ளது.

(ii) ஒருவருடைய சமூகம் இல்லாத வேளையில் அவருடைய விடயங்களை முகாமைத்துவம் செய்ய ஒருவரால் உறப்பட்ட செலவுகளுக்கு பரிகாரம் இல்லை.

(iii) ஜஸ்டீனியன் சக்கரவர்த்தி தன்னுடைய காலப்பகுதியில் உரோமன் சட்ட முழு அமைப்பையும் கோவைப்படுத்தினான்.

(iv) மரணசாதன ஆக்குனர் ஒருவருக்கு தன்னுடைய ஆதனத்தை கையாளும் முழுமையான சுதந்திரத்தை உரோமன் சட்டம் வழங்கியுள்ளது.

4. இரண்டு பகுதிகளுக்கும் விடையளிக்குக.

(i) "சேவகத்தின் வகுப்பாக்கங்கள் அவற்றுடன் இணைந்துள்ள உரிமைகளை அடையாளம் காணுவதில் முக்கியமான பங்கினை வகிக்கின்றது".

இக்கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? உமது விடையை விளக்குக.

( 6 புள்ளிகள்)

(ii) *jus gentium* இன் கீழ் பொருளொன்றின் சொந்தத்தினை பல்வேறு வழிமுறைகளின் கீழ் கைக்கொள்ளலாம். இவற்றில் சில முறைகள் மூல சொந்தக்காரர் தனது சொந்தத்தை கைமாற்றம் செய்ய விரும்பி இருந்தாலும் அல்லாவிட்டாலும் இன்னொருவருக்கு சொந்தம் கைமாற்றம் அடைவதை இயைபாக்குகின்றது; கைக்கொள்ளும் சந்தர்ப்பத்தில் அப்பொருட்களுக்குரிய சொந்தக்காரர் இல்லாத விடத்தும் அப்பொருட்கள் மீதான சொந்தத்தை கைக்கொள்ள முடியும்.

மேலே தரப்பட்ட கூற்றின் வலிதான தன்மை மீது கருத்துரைக்க. பலவகைப்பட்ட கைக்கொள்ளல் முறைகள் மற்றும் அவற்றினுடைய பிரயோகம் தொடர்பான எடுத்துக்காட்டுக்களின் ஆராய்வுடன் உமது விடையை விளக்குக.

(14 புள்ளிகள்)

## பகுதி ஆ – சட்டமுறைமை

5. "சட்டம் என்பது ஏராளமான தோற்றுவாய்களை உள்ளடக்கி இருப்பதால், வழங்கப்பட்ட ஒரு காலப்பகுதியில் ஒரு நாட்டினுடைய சட்டம் என்ன என்பதை அடையாளம் காணுதல் இலகுவான விடயம் ஒன்றல்ல. சில தோற்றுவாய்கள் சமூக மாற்றங்களுக்கு ஏற்ப சட்டத்தை சீராக்குகின்றது, அவற்றில் சில, விசேட அக்கறைகளை பாதுகாப்பதுடன் இன்னும் சில இறுக்கமான சட்டத்தின் கடினத்தன்மையை வலுப்படுத்துகிறது. இவ்வயில் இவ்வமைப்பிலுள்ள ஒவ்வொரு தோற்றுவாயும் விசேட செயற்பாட்டை மேற்கொள்வதால் தோற்றுவாய்களின் சேர்க்கை, சட்டம் என்ற கொள்கையின் அனைத்து எதர்பார்ப்புகளையும் திருப்திபடுத்துகின்றது".

இலங்கையில் பிரயோகத்திலுள்ள சட்டதோற்றுவாய்களுடன் தொடர்புறுத்தி இக்கூற்றின் வலிதான தன்மையை விமர்சித்து பகுப்பாய்வு செய்க. (தோற்றுவாய்களின் உள்ளடக்கம் பற்றிய விளக்கமான ஆராய்வு ஒன்று எதிர்பார்க்கப்பட மாட்டாது).

6. முவாகம என்ற சிறிய கிராமம் ஒன்று அடர்ந்த காடொன்றின் மூலைப்பகுதியில் உள்ளது. இக்காடு பல்வேறுபட்ட மான் இனங்கள் உட்பட ஏராளமான மிருகங்களின் வாழ்விடமாகும். மான் இனத்தின் இயற்கை வாழிடம் பற்றிய கற்கை நெறி தொடர்பாக பாடசாலைகள், மற்றும் பல்கலைக்கழக விஞ்ஞான மாணவர்கள் உட்பட உள்ளூர் மற்றும் வெளியூர் வருகையாளர்களின் முக்கியத்துவத்தை இப்பிரதேசம் அண்மைய பலவருடங்களில் பெற்றுக்கொண்டுள்ளது.

நீண்ட காலமாக முவாகம கிராமத்தவர்களில் சிலர் காட்டிலுள்ள மான்களை வேட்டையாடும் வழக்கம் ஒன்று உண்டு. உணவு வகையொன்றான மான் இறைச்சியை கிராமத்தவர்களில் சில 'முதலாளி மார்கள்' விநியோகித்து வருகின்றனர். கிராமத்தவர்களின் வேட்டையாடுகின்ற நடவடிக்கைகளால் இக்காட்டிலுள்ள மான்களின் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவம் சில இனங்கள் முற்றாக இல்லாமல் ஒழிக்கப்பட்டுள்ளதாகவும் அண்மைய ஆய்வொன்றில் கண்டுபிடிக்கப்பட்டது.

'மானைக் காப்பாற்றுவோம்' என்ற மிருக பாதுகாப்பு குழுவொன்று, அரசாங்க அதிகார சபைகள் தலையிட்டு இந்த நடைமுறையை நிறுத்தவேண்டும் என விரும்புகின்றது. எனினும் மான் வேட்டை கிராமத்தினுடைய வலிதான வழக்காறு ஒன்றா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள முதலில் விரும்புகின்றது. 50 வயது மதிக்கத்தக்க ரண்பண்டா என்ற மான் வேட்டையாளர் தனக்கு முதல் தன்னுடைய தந்தையும் இவ்வியாபாரத்தில் ஈடுபட்டு இருந்ததாக கூறுகின்றார். எவ்வாறாயினும் 69 வயதுடைய உக்குபண்டா என்ற கிராமத்தவர் பத்து வருடங்களுக்கு முன்பு அரசாங்க அலுவலர்கள் இந்த நடைமுறையை தடைசெய்ததுடன் வேட்டையாடுதலை தடுப்பதற்காக காட்டுலாகா அதிகாரிகளை நியமித்திருந்தனர் எனவும் கூறினார். 91 வயதுடைய ரண்எத்தனா என்பவர் ஒரு காலத்தில் மான்கள் கிராமத்தை அண்மித்த பகுதிகளில் அலைந்து திரிந்த போதிலும் கிராமத்தவர் எவரும் அவற்றிற்கு எந்த தீங்கையும் இழைக்க வில்லை என கூறினார். இன்றும்கூட மான் இறைச்சி உண்பவர்களின் தொகை மிக அரிது எனவும், பெரிய நகரங்களில் விற்பனை செய்வதற்காக ஒரு சில கிராமத்தவர்களே மான்களை கொலை செய்கிறார்கள் எனவும் கூறுகிறார்.

'மானைக்காப்பாற்றுவோம்' அமைப்பு இநத வழக்காற்றின் வலிதான தன்மை பற்றி உமது ஆலோசனையை கண்டறிய விரும்புகிறது. அவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

7. P எதிர் P வழக்கு 1965ஆம் ஆண்டு உயர்நீதி மன்றத்தில் தீர்க்கப்பட்ட வழக்கொன்றாகும். இவ்வழக்கில் ஏற்கனவே ஒரு பெண்ணை, திருமணம் செய்த கிறிஸ்தவ ஆண் ஒருவன் இரண்டாவது தடவையாக பௌத்த பெண் ஒருவரை திருமணம் புரிந்தார். திருமணம் செய்த நேரத்தில் முதலாவது மனைவி உயிர் வாழ்ந்து வருவதோடு அவர்கள் இருவரும் விவாகரத்து பெற்று இருக்கவில்லை. ஒரே நேரத்தில் ஒரு வாழ்க்கைதுணைக்கு மேல் இன்னொருவரை (அதாவது கணவன் அல்லது மனைவி) கொண்டு இருத்தல் என்ற குற்றமான இருதார மணக்குற்றம் புரிந்தமைக்காக கணவனை குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மேலும் ஒரே நேரத்தில் நான்கு மனைவிமாரை முஸ்லிம் அணொருவர் சட்டத்தின் கீழ் கொண்டிருக்க உரித்துடையவர் என்ற அடிப்படையில் இங்கு குறிப்பிட்ட ஆண் முஸ்லிமாக இருந்திருப்பின் இவ்விடயம் வேறுபடும்மெனவும் குறிப்பிட்டது.

பின்வரும் சூழ்நிலைகளின் கீழ்; P எதிர் P என்ற தீர்ப்பை பிணிக்கும் முற்தீர்ப்பாக கருத முடியுமா?

(i) 2000ஆம் ஆண்டு மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கு - இவ்வழக்கில் முஸ்லிம் ஆண் முதல் மனைவி உயிருடன் இருக்கும்போது இரண்டாவது மனைவியை திருமணம் செய்துள்ளார். இரண்டு பெண்களும் முஸ்லிம்களாவர்.

(ii) 2005ஆம் ஆண்டில் உயர் நீதிமன்ற வழக்கு - இவ் வழக்கில் முதல் திருமணம் நிலைத்திருக்கின்ற அதே வேளையில் முதல் மனைவி உயிருடன் உள்ளபோது கிறிஸ்தவ ஆண் இரண்டாவது திருமணத்தை செய்கின்றார்.

(iii) 1969 ஆம் ஆண்டு கோமறைக்கழக வழக்கு - இங்கு ஏற்கனவே பௌத்த பெண்ணை திருமணம் முடித்து இருந்த கிறிஸ்தவ ஆண்ணொருவர் முதல் மனைவியின் இறப்பினை அடுத்து இரண்டாவது மனைவியை ஒரு (கிறிஸ்தவர்) திருமணம் செய்கிறார்.

(iv) 1989ஆம் ஆண்டு மேன்முறையீட்டு நிதிமன்ற வழக்கு - இங்கு முதல் கணவன் உயிருடன் இருக்கின்ற அதே வேளை விவாகரத்து பெறாத ஒரு கிறிஸ்தவ பெண்ணொருவர் பௌத்த ஆண்ணொருவரை திருமணம் முடித்துள்ளார்.

8. நியதிச்சட்ட பொருள்கோடலுக்கு பயன்படுத்தப்பட்டுள்ள பல்வேறுபட்ட ஊகங்கள் அனைத்தினூடாகவும் பூரணப்படுத்தப்படுவது யாதெனில் ஆரம்பத்திலேயே உள்ளடக்க கருதப்படாத சூழ்நிலைகள் மற்றும் ஆட்கள் தொடர்பாக நியதிச்சட்டம் ஏற்புடையதாகாது என்ற பொது நோக்கத்தை உறுதிப்படுத்துதல் ஆகும்.

இயைபான தீர்ப்புச்சட்டங்களின் விளக்கங்களை பயன்படுத்தி மேலே தரப்பட்ட கூற்றின் வலிதான தன்மை மீது கருததுரைக்க.

(பதிப்புரிமைபெற்றது)